**ஆகஸ்ட் – 29**

# TNPSC துளிகள்

- சர்வதேச வாகனத் தொழில்நுட்ப மையமானது (ICAT) 15 மீட்டர் பல அச்சு படுக்கை வசதி கொண்ட பேருந்துக்கான முதல் இணக்கச் சான்றிதழை வழங்கியுள்ளது.
- லடாக்கின் கார்கிலில் உள்ள சுரு பள்ளத்தாக்கில் நடைபெறும் சுரு கோடைகாலத் திருவிழாவானது, அப்பகுதியின் இயற்கை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தி, சுற்றுச்சூழல் மற்றும் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துகிறது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமானது (DRDO), லே மாவட்டத்தில் உள்ள உலகின் மிக உயரமான இறங்கு தளங்களில் ஒன்றான நியோமா-முத் இறங்கு தளத்தில் (Nyoma-Mudh Drop Zone) 22,000 அடி உயரத்தில் மற்றும் −15°C வெப்பநிலையில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ராணுவ போர் பாராசூட் அமைப்பை (MCPS) வெற்றிகரமாக சோதித்தது.
- சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவ மனையில் உலகின் முதல் 'பின்ஹோல் பியூபில்லோபிளாஸ்டி' (Pinhole Pupilloplasty) மையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.
  - பின்ஹோல் பியூபில்லோபிளாஸ்டி/ஊசித்துளை கண்மணி சீரமைப்பு (PPP) என்பது டாக்டர் அமர் அகர்வால் உருவாக்கிய நுண்சிகிச்சை தொழில்நுட்பமாகும்; இது கருவிழித் தழும்புகள், ஒழுங்கற்ற கருவிழிகள் உள்ளிட்ட பார்வைப் பிரச்சினைகள் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகளின் பார்வையை மேம்படுத்த உதவுகிறது.
- நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான குளோர்பெனிரமைன் மாலேட் மற்றும் பினைலெப்ரின் ஹைட்ரோகுளோரைடு கொண்ட நிலையான அளவு கலவை (FDC) மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை அரசு கட்டுப்படுத்தி உள்ளது.
  - இந்தக் கலவைகள் சிறு குழந்தைகளுக்கு உடல்நல அபாயங்களை ஏற்படுத்தக் கூடும் என்பதோடு, இதற்கு பாதுகாப்பான மாற்று மருந்துகள் உள்ளன என்றும் அரசு தெரிவித்துள்ளது.
- நீர் ஒத்துழைப்பு, அமைதி மற்றும் பாதுகாப்பை வலியுறுத்தும் விதமாக 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 முதல் 27 வரை உலக நீர் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Water for People & Progress என்பதாகும்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு கனிம நிறுவனம்


- 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு கனிம வள மேம்பாட்டுக் கழகம் (TNMRDC) என்ற புதிய பொதுத்துறை நிறுவனத்தை (PSU) தமிழ்நாடு அரசு அமைக்க உள்ளது.
- இந்தப் புதிய பொதுத்துறை நிறுவனம் சுரங்கப் பணி, கனிமங்களை வெட்டியெடுத்தல், தரத்தை மேம்படுத்துதல், இறக்குமதி, மதிப்பு கூட்டுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் கனிம விற்பனை ஆகியவற்றை மேற்கொள்ளும்.
- நவீன டிஜிட்டல் உள்கட்டமைப்பைக் கொண்ட ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் கனிமங்கள் தொடர்பான செயல்பாடுகளை நிகழ்நேரத்தில்

கண்காணிக்கும்.

- ❖ ஆளில்லா விமான அமைப்பு (UAV) மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சட்டவிரோத சுரங்கங்களில் ஈடுபடும் பகுதிகளைக் கண்காணிப்பு பிரிவு கண்டறியும்.
- ❖ குண்டுபெரும்பேடு மற்றும் வெள்ளறை ஏரிகளில் தாவர புதைபடிவப் பூங்கா அமைக்கப் படுவதுடன் இவை சுமார் 60 கோடி ஆண்டுகள் பழமையானவை என நம்பப்படுகிறது.
- ❖ பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ் கைவிடப்பட்ட சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் சுரங்க சுற்றுலா மையங்களை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை (DPR) மாநில அரசு தயாரிக்கும்.




## தமிழ்நாடு தொழில்துறை பூங்காக்கள்




- ❖ மாநிலச் சட்டப்பேரவையில் புதிய தொழில்துறை பூங்காக்கள் மற்றும் தொழிலாளர்

தங்கும் வசதி திட்டங்களை தமிழ்நாடு அரசு அறிவித்தது.

- ❖ கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் (SIPCOT) தொழில்துறை பூங்காவில் 2,500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்ட ₹130 கோடி செலவிடப்படும்.
- ❖ தூத்துக்குடி மாவட்டம் முடிவைத்தானேந்தலில் ₹1,390 கோடி மதிப்பில் 2,570 ஏக்கர் பரப்பளவில் புதிய தூய்மையான மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்துறை பூங்கா உருவாக்கப்படும்.
- ❖ தூத்துக்குடி மாவட்டம் சில்லாநத்தத்தில் ₹774 கோடி மதிப்பில் 1,294 ஏக்கர் பரப்பளவில் மின்சார வாகன (EV) உற்பத்தி பூங்கா அமைக்கப்படும்.
- ❖ புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவிலில் சிறிய ஜவுளிப் பூங்காக்களும், விழுப்புரம் மாவட்டம் ஓமந்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டம் லத்துவாடியில் தொழில் துறைப் பூங்காக்களும் அமைக்கப்படும்.
- ❖ குவாண்டம் பாதுகாப்பான மாநிலம் (Quantum Safe State) குறித்த ஆய்வு மற்றும் சிவகாசி பட்டாசு பொது வசதி மையம் ஆகியவையும் அறிவிக்கப்பட்டுள்ளன.

## PSTM இடஒதுக்கீடு சட்டத் திருத்தம்





- ❖ கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் வழியில் பயின்றோருக்கான (PSTM) இடஒதுக்கீட்டின் கீழ் செய்யப் பட்ட அரசுப் பணி நியமனங்களைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சட்டத் திருத்தம் மேற்கொண்டுள்ளது.
- ❖ 20% PSTM முன்னுரிமையைக் கோரிய 84 அரசுப் பணியாளர்கள் தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டில் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- ❖ 2010 ஆம் ஆண்டுச் சட்டம், நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலியிடங்களில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20% இடஒதுக்கீடு வழங்குகிறது.
- ❖ 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி முதல் அறிவிக்கப்பட்ட PSTM அறிவிப்புகள், தேர்வுகள் மற்றும் நியமனங்களை இந்தத் திருத்தம் செல்லுபடியாக்குவதோடு, தொடர்புடைய தொடர் நடவடிக்கைகளையும் பாதுகாக்கிறது.
- ❖ எதிர்காலத்தில், PSTM முன்னுரிமையை ஏற்கனவே பயன்படுத்தியவர்கள், அதிக

ஊதியம் பெறும் பதவிகளுக்கு மட்டுமே அதை மீண்டும் பயன்படுத்த முடியும்.

- ஆளுநர் ஆர்.வி. அர்லேகர் இந்த மசோதாவிற்கு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 அன்று ஒப்புதல் அளித்தார், அதன் பிறகு இது தமிழ்நாடு அரசு இதழில் வெளியிடப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## மக்களவை கூட்டத் தொடர் ஒத்தி வைப்பில் தாமதம்




- மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவை அமர்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப் பட்டு பத்து நாட்கள் கடந்து விட்டன, ஆனால் அதன் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு (முறையான முடிவு) குறித்து இன்னும் எந்தத் தகவலும் இல்லை.
- ஆகஸ்ட் 13 அன்று மக்களவையும் மாநிலங்களவையும் அதன் அமர்வுகளில் கால வரை இன்றி ஒத்தி வைக்கப்பட்டன.
- மக்களவை அமர்வு காலவரையின்றி ஒத்தி வைக்கப்படுவதற்கும் அதன் கூட்டத் தொடர் ஒத்தி வைப்புக்கும் (முறையான முடிவு) இடையிலான கால இடைவெளி பொதுவாக இரண்டு முதல் நான்கு நாட்கள் ஆகும்.
- இருப்பினும், அமர்வு ஒத்தி வைப்பும் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பும் ஒரே நாளில் நடைபெற்ற பல நிகழ்வுகளும் உள்ளன.
- 2015-ஆம் ஆண்டு மழைக்கால கூட்டத்தொடருக்கான இடைவெளி 28 நாட்களாகவும், 2021-ஆம் ஆண்டில் அது 20 நாட்களாகவும் இருந்தது என்பது உண்மையே.
- அரசியலமைப்புச் சட்டத்தின் 85(2) சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் உத்தரவின் மூலம் சபையின் ஒரு கூட்டத்தொடர் முடிவுக்கு வருவது கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு எனப்படும்.
- சபையை ஒத்தி வைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தும்போது, குடியரசுத் தலைவர் பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே செயல்படுகிறார்.
- குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், பிரதமர் அமைச்சரவையுடன் கலந்தாலோசிக்கலாம்.
- சபை கூட்டத்தொடரில் இருக்கும் போது கூட, எந்த நேரத்திலும் சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படலாம்.
- இருப்பினும், வழக்கமாக, சபையின் காலவரையற்ற அமர்வு ஒத்தி வைக்கப்பட்ட பின்னரே சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படுகிறது.
- சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்படுவதற்கும், ஒரு புதிய அமர்வில் அது

மீண்டும் கூடுவதற்கும் இடைப்பட்ட காலம் 'அமர்வுகளுக்கு இடையிலான காலம்' என்று அழைக்கப் படுகிறது.

- சபையின் அமர்வை ஒத்தி வைப்பதல்ல, சபையின் கூட்டத் தொடர் ஒத்தி வைப்பு தான் ஒரு அமர்வை முறையாக நிறைவு செய்து, அடுத்த அமர்வு கூட்டப் படுவதற்கு வழி வகுக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய மேய்ச்சல் சமூகக் கூட்டமைப்பு மற்றும் மாநாடு 2026

- சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினர் ஆண்டின் (IYRP) கீழ் 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய மேய்ச்சல் சமூகக் கூட்டமைப்பு மற்றும் மாநாட்டை மங்கோலியா தொகுத்து வழங்கியது.
- இந்த மாநாட்டில் நிலையான மேய்ச்சல் மற்றும் மேய்ச்சல் நில மேலாண்மை குறித்து விவாதிக்கப்பட்டது.
- மங்கோலியாவின் உணவு, விவசாயம் மற்றும் சிறுதொழில் அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்தன.
- பங்கேற்பாளர்கள் உலகளாவிய மேய்ச்சல் சமூகத்தினரின் பிரகடனம், மேய்ச்சல் சமூகப் பெண்களின் பிரகடனம் மற்றும் மேய்ச்சல் சமூக இளைஞர்களின் பிரகடனம் ஆகியவற்றைத் தயாரித்தனர்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மங்கோலியா தொகுத்து வழங்கும் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCCD COP17) விவாதங்களுக்கு இதன் முடிவுகள் பங்களிக்கும்.




# பொருளாதாரச் செய்திகள்

## 15 ஆண்டுகளில் இல்லாத அளவு உயர்வு - இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு

- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான காலகட்டத்தில் இந்தியா 30.7 பில்லியன் டாலர் மொத்த அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஈர்த்துள்ளது, இது கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத மிக உயர்ந்த அளவாகும்.
- நிகர அந்நிய நேரடி முதலீடானது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம்


வரையிலான காலாண்டில் 7.8 பில்லியன் டாலர்களை எட்டியது, இது 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு மிக அதிக அளவாகும்.

- 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், மொத்த அந்நிய நேரடி முதலீட்டு வரவு 9.3 பில்லியன் டாலர்களாகவும், மொத்த வெளியேற்றம் 7.9 பில்லியன் டாலர்களாகவும் இருந்தது, இதன் விளைவாக நிகர அந்நிய நேரடி முதலீடு 1.3 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- சிங்கப்பூர், நெதர்லாந்து, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் அந்நிய நேரடி முதலீட்டு வரவில் சுமார் 74% பங்கைக் கொண்டுள்ளன.
- உற்பத்தித் துறை அதிக அளவிலான முதலீடுகளைப் பெற்றது, அதைத் தொடர்ந்து மின்சார உற்பத்தி, கணினி சேவைகள் மற்றும் தகவல் தொடர்பு சேவைகள் உள்ளன.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான மொத்த அந்நிய நேரடி முதலீடு முந்தைய காலாண்டை விட கிட்டத்தட்ட 46% அதிகமாகவும், 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதம் வரையிலான காலாண்டை விட சுமார் 15% அதிகமாகவும் உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பாரதிய அந்தரிக்ஷா நிலையத்தின் (BAS) முதல் தொகுதி





- 2035-ஆம் ஆண்டுக்குள் தனது சொந்த விண்வெளி நிலையத்தை நிறுவுவதற்கான

பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

- முன்மொழியப்பட்ட பாரதிய அந்தரிக்சா நிலையத்தின் முதல் தொகுதிக்கு இஸ்ரோ ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிலையத்தின் முதல் தொகுதி BAS-01 என்று அழைக்கப்படுகிறது.
- இது 400 முதல் 450 கிலோமீட்டர் உயரத்தில், புவியின் தாழ் சுற்றுப்பாதையில் 52 டன் எடையுள்ள விண்வெளி நிலையமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.
- மூன்று முதல் ஆறு மாதங்கள் வரை தங்குவதற்கு, மூன்று முதல் நான்கு விண்வெளி வீரர்களைக் கொண்ட குழுவிற்கு ஆதரவளிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த நிலையம் ஐந்து தொகுதிகளைக் கொண்டிருக்கும்.
- அதே சமயம், ககன்யான் திட்டமும் செயல்பாட்டில் உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## திஹிங் பட்காய் வண்ணத்துப்பூச்சி பன்முகத்தன்மை





- அஸ்ஸாமில் உள்ள திஹிங் பட்காய் தேசியப் பூங்காவில் 37 அழிந்து வரும் இனங்கள் உட்பட மொத்தம் 165 வகையான வண்ணத்துப்பூச்சி இனங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன.
- திஹிங் பட்காய் தேசியப் பூங்கா அஸ்ஸாமின் திப்ருகர் மற்றும் தின்சுகியா மாவட்டங்களில் 234.26 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது.
- இது அஸ்ஸாம் பள்ளத்தாக்கு வெப்பமண்டல ஈரமான பசுமைமாறாக் காடுகளின் எஞ்சிய பகுதிகளில் ஒன்றாகும்.
- இப்பூங்கா 937 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள திஹிங் பட்காய் யானைகள் காப்பகத்தின் முக்கியப் பகுதியாக அமைகிறது.

## உலகளாவிய வறட்சி மீள்திறன் கட்டமைப்பு


- பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் (UNCCD COP17) ஒரு புதிய உலகளாவிய வறட்சி மீள்திறன் கட்டமைப்பு தொடங்கப்பட்டது.
- வறட்சியை எதிர்பார்ப்பதற்கும், தயாராகுவதற்கும் மற்றும் தாங்குவதற்குமான ஒரு

நாட்டின் திறனை மதிப்பிடுவதற்கான உலகின் முதல் வறட்சி மீள்திறன் குறியீட்டை (DRI) இது உள்ளடக்கியுள்ளது.

- தரவு அடிப்படையிலான வறட்சித் திட்டமிடலை ஆதரிப்பதற்காக, செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் பகுப்பாய்வு மற்றும் பாதிப்பு குறித்த வரைபடமாக்கல் ஆகியவற்றை DRI பயன்படுத்துகிறது.
- வறட்சி மீள்திறன் முதலீட்டு வசதி (DRIF) என்பது வறட்சி மீள்திறன் திட்டங்களை அளவிடுவதற்கான உலகளாவிய நிதித் தளமாகும்.
- நீர் பாதுகாப்பு, நிலையான விவசாயம் மற்றும் நில சீரமைப்பு ஆகியவற்றிற்கான முதலீட்டு அபாயங்களைக் குறைக்கவும், தனியார் மற்றும் நிறுவன நிதியை ஈர்க்கவும் பொது நிதியைப் பயன்படுத்துவதை DRIF நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியாவின் முதல் மண் அமைப்பு வரைபடம்




- தேசிய மண் ஆய்வு மற்றும் நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் பணியகம் (NBSS&LUP) இந்தியாவின் முதல் மண் அமைப்பு வரைபடத்தை உருவாக்கியுள்ளது.
- இது நாடு முழுவதும் ஹெக்டேர் அளவில் எண்ணிமப்படுத்தப்பட்ட மண் வகைப்பாடு தரவுகளை வழங்குகிறது.

- இது குறிப்பிட்ட நிலங்களுக்கு சிறந்த பயிர்களை அடையாளம் காண விவசாயிகளுக்கு உதவுகிறது, மேலும் பிராந்தியத்திற்கேற்ற கொள்கைகள், பயிர் திட்டமிடல் மற்றும் நிலப் பயன்பாட்டு உத்திகளுக்கு ஆதரவளிக்கிறது.
- மண்ணில் உள்ள மணல், வண்டல் மற்றும் களிமண் ஆகியவற்றின் விகிதத்தைக் கொண்டு மண் அமைப்பு தீர்மானிக்கப்படுகிறது.
- இந்தியாவின் முதல் மண் ஆழ வரைபடம், மண் அமைப்பு வரைபடத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- மண் ஆழ வரைபடமும் NBSS&LUP நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- NBSS&LUP என்பது ICAR-இன் கீழ் உள்ள ஒரு தேசிய நிறுவனம் ஆகும் என்பதோடு இது மகாராஷ்டிராவின் நாக்பூரில் அமைந்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கூர்க்காலாந்து விவகாரக் குழு




- டார்ஜிலிங் மலைப்பகுதியில் உள்ள கூர்க்கா விவகாரத்திற்கு "நிரந்தர அரசியல் தீர்வை" இறுதி செய்ய மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.
- முன்னாள் துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகரும் தற்போதைய பேச்சுவார்த்தையாளருமான பங்கஜ் குமார் சிங் இக்குழுவிற்கு தலைமை தாங்குவார்.
- கூர்க்கா சமூகத்தின் அடையாளம், சுயராஜ்ஜியம் மற்றும் அரசியலமைப்பு அங்கீகாரம் தொடர்பான கோரிக்கைகளை இக்குழு கவனிக்கும்.
- டார்ஜிலிங் மலைப்பகுதி, தராய் மற்றும் டூவர்ஸ் ஆகியவற்றின் சில பகுதிகளை உள்ளடக்கிய தனி மாநிலத்தை கூர்க்காலாந்து கோரிக்கை வலியுறுத்துகிறது.
- கூர்க்கா பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த 2025 ஆம் ஆண்டு அக்டோபரில் பங்கஜ் குமார் சிங்கை மத்திய அரசு பேச்சுவார்த்தையாளராக நியமித்தது.
- டார்ஜிலிங் உத்திசார் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் இது பிரதான இந்தியாவிற்கும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் இடையிலான முக்கிய நில இணைப்பான சிலிகுரி வழித்தடத்திற்கு அருகில் அமைந்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## இணையத் தமிழ்ச் செம்மல் விருது 2026

- டிஜிட்டல் தளத்தில் தமிழ் மொழி மேம்பாட்டிற்கான பங்களிப்பை அங்கீகரிக்கும்

வகையில் தமிழ்நாடு அரசு இணையத் தமிழ்ச் செம்மல் விருதை அறிமுகப்படுத்தி உள்ளது.

- ❖ இணையதளங்கள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் இணையவழி ஆய்வுகள் மூலம் தமிழை மேம்படுத்தி வளர்க்கும் தமிழறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களை இது கௌரவிக்கிறது.
- ❖ இவ்விருது இணையத் தமிழ்ச் செம்மல் என்ற பட்டத்தையும் ₹25,000 ரொக்கப் பரிசையும் உள்ளடக்கியது.
- ❖ டிஜிட்டல் தமிழ் சேவைகள் மற்றும் யூனிகோட் (Unicode) மேம்பாட்டிற்கான முயற்சிகளை இது அங்கீகரிக்கிறது.
- ❖ தமிழ் மொழிப் பணிக்கான அங்கீகாரத்தை இந்த விருது டிஜிட்டல் சகாப்தத்திற்கும் விரிவுபடுத்துகிறது.




## நம்மாழ்வார் விருதுகள் 2025-26




- ❖ 2025-26 ஆம் ஆண்டிற்கான இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கான நம்மாழ்வார் விருதுகளை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்.

- சி. நல்லசிவம் (நாமக்கல்), ஏ. சுப்பிரமணியன் (புதுக்கோட்டை), மற்றும் சாதனா (செங்கல்பட்டு) ஆகியோருக்கு இவ்விருதுகள் வழங்கப்பட்டன.
- ஒவ்வொரு விருதும் ₹2 லட்சம் ரொக்கப் பரிசையும் ஒரு பதக்கத்தையும் உள்ளடக்கியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கத்தை, மறைந்த தலைமை ஆசிரியர் பி.எஸ். கௌரிசங்கர் ராஜாவின் மனைவி ஸ்ரீஷாவிடம் முதலமைச்சர் வழங்கினார்.
- விவசாயப் பண்ணைக் குட்டையில் தவறி விழுந்த எட்டு வயது மாணவியைக் காப்பாற்றும் முயற்சியில் வீரமரணமடைந்த கௌரிசங்கர் ராஜாவிற்கு மரணத்திற்குப் பின் இவ்விருது வழங்கப்பட்டது.

# முக்கிய தினங்கள்

## உலக ஏரிகள் தினம் 2026 - ஆகஸ்ட் 27




- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) இந்த நாளை அங்கீகரித்து, 2025 ஆம் ஆண்டில் முதன்முதலாக உலகளவில் கடைபிடிக்கப்பட்டது.
- ஏரிகளுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, அவற்றின் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் நிலையான மேலாண்மையை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நன்னீர் வழங்கல், பல்லுயிர்த் தன்மை பெருக்கம், பருவநிலை ஒழுங்குமுறை, வாழ்வாதாரம் மற்றும் வெள்ள மேலாண்மை ஆகியவற்றிற்கு ஏரிகள் முக்கியமானவை.
- மாசுபாடு, அதிகப்படியான நீர் பயன்பாடு, விவசாயக் கழிவுகள், பருவநிலை மாற்றம் மற்றும் வாழ்விடச் சீரழிவு ஆகியவை முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- பைக்கால் ஏரி உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரியாகும், அதே சமயம் சுப்பீரியர் ஏரி பரப்பளவின் அடிப்படையில் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகும்.

## அணு ஆயுதச் சோதனைகளுக்கு எதிரான சர்வதேச விழிப்புணர்வு தினம் 2026 - ஆகஸ்ட் 29

- 2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) இந்த நாளை அங்கீகரித்தது.

- அணு ஆயுத சோதனைகளின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் பற்றிய விழிப்பு உணர்வை ஏற்படுத்துவதையும் அவற்றை நிறுத்துவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று கஜகஸ்தானில் உள்ள செமிபாலாடின்ஸ்க் அணு ஆயுதச் சோதனை தளம் மூடப்பட்டதை இந்த நாள் நினைவுபடுத்துகிறது.
- அனைத்து அணு ஆயுத சோதனைகளையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக 1996 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த அணு ஆயுதச் சோதனை தடை ஒப்பந்தம் (CTBT) ஏற்றுக் கொள்ளப் பட்டது, ஆனால் இது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.
- இந்த நாள் முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★